முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மயூரேசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.10.2018, புதன்கிழமை

1. **ஆன்ம பலமும் பிறப்பின் பயனும்**
**அகிலத்தார் அடைதல் கண்டு**
**ஜென்மத்தை கடைத்தேற்ற வேண்டி**
**சிவராஜ யோகியாக வந்த அரங்கன்**

2. அரங்கன் ஞானக் கொள்கைகளை
அகிலத்தார் ஏற்று வருகவே
வரங்கள் பெற்று சிறப்பரென
வழிமொழிந்து ஒளி சூட்சும நூலை

3. நூலை **விளம்பி நங்கை திங்கள்**
**நிலமதனில் முப்பானோர் திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 31ம் நாள் 17.10.2018, புதன்கிழமை)**
**ஞாலமதில் மயூரேசர் யானும்**
நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற

4. நலம் தரும் ஞான சக்தியான
ஞானதேசிகன் வழிகாட்டலை
உலக மக்கள் ஏற்று வருதலுற
உபதேசம் ஏற்றும் தொடர்ந்து வர

5. வருகவே அரங்கன் தருமமதை
வழிமொழிந்து மக்கள் தொடர
தருமமுடன் சுத்தநெறி கடைப்பிடித்து
தன்னார்வ தொண்டர்களாகி

6. ஆகியே அரங்கனே ஞானத்தின்
ஆசான் உயர் தலைவனென
அகிலத்தார் ஏற்றுத் தொடரவே
அனைவரும் அரங்கன் பூசை கலந்து

7. கலந்து அகலாது தொடர
கடமையென எந்நாளும் செபம்
தலைவன் முருகன் பேரில்
தடைபடா செய்து வருகவே

8. வருகவே மக்களின் வாழ்க்கையில்
வளமும் வல்லமையும் கூடும்
தரும பலம் பெருகி வருகவே
தரணியோருக்கு தேட்டு தனவளம்

9. வளமான வல்லமையான மனபலம்
வசதி நிலை ஆஸ்தி கீர்த்தி
பலமான பாதுகாப்பான இல்லறம்
பக்தியான புத்திர வரம் யோகம்

10. யோகமான வாழ்வும் திடமும்
உண்மை நிலையும் சர்வ திடமும்
வகைபட குருவருள் பலமும்
வந்தடைந்து மக்கள் சிறப்பர்

11. சிறப்பறிவு கூடி அரங்கன் தயவால்
சிந்தை தெளிவு எல்லா வரமும்
மறுப்பில்லா வீடுபேறும் அடைவர்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் மயூரேசர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகினில் மனிதனாய் பிறந்தவர்கள் ஆன்மபலம் பெற்று பிறப்பின்மையாகிய முற்றுப்பெற்ற நிலையெனும் மரணமிலாப் பெருவாழ்வை அடைந்திட வேண்டியும், அதற்கான வழிமுறைகளை அருளி அவர்களது ஜென்மத்தினைக் கடைத்தேற்றிட வேண்டி இக்கலியுகத்தினில் சிவராஜயோகியாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அற்புதமான ஞானக் கொள்கைகளை உலக மக்கள் ஏற்று வாழ்வினில் கடைப்பிடித்திட்டால் அவர்களெல்லாம் அரங்கனிடம் வரங்களைப் பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள் என அரங்கா உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 31ம் நாள் 17.10.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மயூரேசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மயூரேசர்.

எல்லாவிதமான நலங்களையும் தந்தருளும் ஞானசக்தியாக உள்ள ஞானதேசிகன் அரங்கமகானின் வழிகாட்டலை உலக மக்களெல்லாம் ஏற்று கடைப்பிடித்துவர உபதேசங்களை ஏற்று பின்தொடர்ந்தும் ஆறுமுக அரங்கன் தன்னலமற்று உலக உயிர்களுக்கு செய்கின்ற தர்மசெயல்களுக்கு பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் பங்கு கொண்டு தர்மத்தினை வளர்ப்பதுடன் உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து, சுத்த சைவநெறியினை கடைப்பிடிப்பதுடன் தினம்தினம் தவறாமல் ஞானிகளை பூஜித்து அரங்கனிடத்து தன்னார்வ தொண்டர்களாக ஆகிட வேண்டும்.

தொண்டர்களாக ஆகி, தாம் ஏற்றுக் கொண்ட குலகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானத்தின் குருநாதன். குரு அரங்கனே இவ்வுலகின் உயர்தலைவன் என்றே முழுமனதாய் ஏற்றுக் கொண்டு அரங்கனை பின்தொடர்வதுடன் ஆறுமுக அரங்கன் உலக நலன் கருதி நடத்துகின்ற ஞானபூசைகளில் கலந்து கொண்டு எந்நாளும் அரங்கனை விட்டு அகலாது தொடர்ந்து தொண்டுகள் செய்தும் தவறாது கடமையென எண்ணி எந்நாளும் ஜெபதபங்களை முருகப்பெருமான் பெயரில் செய்தும் வர வேண்டும்.

அவ்விதமே ஜெபதபங்களை வாழ்நாள் முழுதும் தொடரும் மக்களுக்கு எல்லா வளமும் வல்லமையும் அவர்களது வாழ்வினில் உண்டாகிடும். தருமபலம் பெருக பெருக நல்ல வருவாயும், லாபமும், தொழில் அபிவிருத்தியும் உண்டாகி வளமான வல்லமையான மனபலம் உண்டாகி நல்ல வசதிகள் உண்டாகிடும். ஆஸ்தியும் பெருகும், கீர்த்தியும் வளரும், பலமான பாதுகாப்பான இல்லறம் சிறப்பாக உருவாகி பக்திமிக்க புத்திரர்களை வரமாக பெற்று யோகமான வாழ்வும் மனோதிடம் மிக்க வாழ்வும் உண்மையை உணரும் பக்குவமும் சர்வவிதத்திலும் திடம் பெற்று குருவருளாம் அரங்கன் அருளும் பலமும் அவர்களுக்கு வந்தடைந்து சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள்.

அவர்களுக்கு சிறப்பறிவு பெருகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவினால் சிந்தை தெளிவும், எல்லா வரங்களும் கிடைக்கப் பெற்று மறுப்புகள் ஏதும் இன்றி வீடு பேற்றினையும் அடைந்து சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மயூரேசர்.

–சுபம்–